JSC-8-TA

# கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நீங்கள் பெறப்போகிற இழக்க போகிற பலன்கள் - நிகழ்ச்சி 8

**அறிவிப்பாளர்:** கிறிஸ்தவர்களுக்கு வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, "நாம் அனைவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிச்சயமாக நிற்கவேண்டியிருக்கும்." ஆனால் இந்த நியாயதீர்ப்பிற்கான நோக்கம் என்ன? இயேசு நம்முடைய பாவத்திற்கான கிரையத்தை செலுத்தி விட்டாரா தேவன் அவைகளை நினைவு கூறுவது இல்லையா?

அப்படியானால், கிறிஸ்தவர்கள் ஏன் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நிற்கவேண்டும்? இந்த நியாயதீர்ப்பிற்கும் இரட்சிப்பிற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா. இரட்சிப்பு என்பது ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுகொள்ளும்போது அவனுக்கு அளிக்கப்படுகிற இலவசமான ஈவாகும்.

ஆனா கிறிஸ்துவின் நியாசனம் என்பது அவர் நம்மை இரட்சித்ததற்கு பிறகு நாம் வாழும் முறையை சார்ந்து இருக்கிறது. கிறிஸ்துவுக்காக

நாம் செய்திட்ட அணைத்தும் அன்று பதிப்பிடபட்டு பலனளிக்கப்படுகிறது.

வேதம் சொல்கிறது, “ஏனென்னில் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது ஏற்ற பலனை அடையும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்”.

நாம் அவருக்காக செய்த நற்க்கிரியைகளுக்காக கிறிஸ்துவிடம் இருந்து பலனை பெறுவோம் என்பது நமக்கு தெரியும், ஆனா இங்க வேதம் என்ன சொல்கிறது என்றால் நம்முடைய தீமைக்கும் பலன் பெருவோம் என்கிறதே? உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் பெருகிற பலன்களை உண்மையில்லாத கிறிஸ்தவர்கள் பெறமாட்டார்களோ?

ஆனா கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக கண்ணீர் இருக்க வாய்ப்பிருக்கிறதா? அங்கு பலன்களை இழக்க நேரிடுமா, பதிப்பையும் கனத்தையும் பரலோகத்தில் நித்தியமாக நமது ஸ்தானத்தை இழக்க வாய்ப்பு இருக்கிறதா?

இந்த கேள்விகளுக்கு வேதாகமத்தில் இருந்து விடைகளை பெற்றுக்கொள்ள நமக்கு உதவியாக இன்றைக்கு Dr. எர்வின் லட்சர் நம்முடன் இருக்கிறார், மூடி திருச்சபையின் மூத்த போதகர் சிக்காகோ, இல்லினோசிஸ். நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்**: வணக்கம். கடந்த சில நிகழ்சிகளில் ஒரே விஷயத்தை மையமாக வைத்து பார்த்து வருகிறோம்: நீங்கள் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும் அந்த நொடியில் உங்கள் இரட்சகரை முகமுகமாக பார்க்கும்போது. அவர் உங்கள் வாழ்க்கையை மதிப்பிடும் அந்த வேலையில், அவர் எதை ஆவலாக எதிர்பார்த்திடுவார்? இந்த செய்தி தொடரில் எனது விருந்தினரான Dr. எர்வின் லட்சர், சிக்காகோ மூடி திருச்சபையின் மூத்த போதகர், இல்லினோசிஸ். அந்த நிமிடத்தை பற்றி விளக்கி சொல்லிவருகிறார்:

**டாக்டர். எர்வின் லட்சர்:** அதாவது, ஜான், இந்து ஒரு மறுக்க முடியாத உண்மை என்று சொல்லுவேன். அதாவது, நீங்க இயேசு கிறிஸ்துவை முகமுகமாய் பார்ப்பதை கற்பனை செய்யுங்க, ஒருத்தருக்கு ஒருத்தர், அந்த நேரத்துல நாம பேசின எல்லா காரியங்களையும் வைத்து அவர் நம்மை நியாயந்தீர்த்திடுவார். நாம கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும்போது அப்படிதான் இருக்கும் என்று வேதாகமமும் நமக்கு அதைதான் போதித்து வருகிறது. இருக்கட்டும், இதற்கான கிரேக்க பதம் பீமா அதற்கு காரணம் அது கிரேக்கர்கள் மற்றும் ரோமர்களால் உயர்த்தப்பட்ட ஒரு பலிபீடம் என்று சொல்லுவார்கள் அங்கதான் போட்டியிலும் பந்தயத்திலும் ஜெயித்தவர்களை ஆராய்ந்து அவர்களுக்கு ஏற்ற பலன்களை வெகுமதிகளை நியாயாதிபதிகள் கொடுப்பார்கள்.

மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார் அதை இன்றைக்கு 2 கொரிந்தியர் ஐந்தாம் அதிகாரத்தில் பார்க்கிறோம், “நாம் எல்லாரும் இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டி இருக்கிறது.” அவர் கிறிஸ்தவர்களை பற்றி கூறுகிறார். அவர் தன்னை பற்றி இங்கு சொல்கிறார். உங்களையும் என்னையும் பற்றி சொல்லுகிறார். நிறைய பேருடைய எண்ணம் எப்படி இருக்கு தெரியுமா இயேசு கிறிஸ்து என் பாவங்களுக்காக மரித்தார், அதனால நாம, எப்படியும் எந்தவித இடையூறுகளும் இல்லாம பரலோகத்திற்குள் நுழைந்திடுவோம் என்பதுதான். வேதம் ஒன்றை மிக தெளிவாக கூறுகிறது, நாம எல்லாருமே இயேசு கிறிஸ்துவால் ஒவ்வொருவராக விசாரிக்கப்படுவோம்.

**ஆன்கர்பெர்க்:** வேதத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ள கூடிய அருமையான விஷயம் தேவன் கிருபையாக நம்மை இரட்சித்ததற்கு பிறகு, நாம கிறிஸ்துவுக்காக செய்து முடிக்கும் ஒவ்வொரு காரியத்திற்கும் அவர் நமக்கு பலன் அளிக்கிறவராக இருப்பதாக வாக்கு பண்ணியிருக்கிறார். தேவனுடைய பலதரப்பட்ட வாக்குத்தத்தங்கள் மத்தியில், சிலர் கேட்பது என்னான்னா,’பலன்களை பெறுவதற்காகவே இயேசுவுக்காக வாழ்வது என்பது சுயநலமாக இருக்கிறதல்லவா?” Dr. லட்சர் இந்த கேள்விக்கு பதிலளிக்கிறார். கவனிங்க:

**எர்வின் லட்சர்:** அதாவது, ஜான், இப்படி சொல்றத கேட்டிருக்கேன், “எந்தவித பலனையும் எதிர்பார்க்காம தேவன் நம்மை நேசிப்பதால்

அவரை நாம் தொழுதுகொள்ள வேண்டுமல்லவா" இது ரொம்ப பயபக்தியோட இருப்பது போல தோன்றும். சரி, இருக்கட்டும், நமக்கு பலன் கிடைத்தாலும் இல்லைன்னாலும் தேவன் நம்முடைய ஆராதனைக்கு துதிக்கு பாத்திரராக இருக்கிறார். ஆனா இந்த பலன்கள் என்பது நம்முடைய யோசனை அல்ல; பலன்களை கொடுக்கும்படியாக பிதாதான் ஆர்வமாக வாஞ்சையோடு இருக்கிறார். நம்மை ஆசீர்வதிக்க வேண்டும் என்பது பிதாவின் விருப்பமாக இருக்கிறது அதனாலதான் புதிய ஏற்பாட்டில் நிறைய ஜனங்களை பார்க்கிறோம், பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும், பலன்களினால் ஊக்குவிக்கப்பட்டார்கள். சரி, நாம் தேவனை தொழுதுகொள்வதற்கான காரணங்களில் ஒன்று சுயநலம். ஆனா இன்றைக்கு உங்களை ஒரு கேள்வி கேட்க்கிறேன். கிறிஸ்துவை பிரியபடுத்த வேண்டும் என்பதற்காக தேவனை தொழுதுகொள்வதில் எந்தவிதமான தவறுகள் இருக்கிறதா? அவருக்கு பிரியமாக நடந்துகொள்வது முக்கியமான ஒன்றாக நினைப்பீர்கள் என நம்புகிறேன். அதாவது, இப்ப இதை பற்றி யோசித்து பார்க்கிறேன், யான், இயேசுவின் கண்களை பார்த்து நிற்ப்பதை கற்பனை செய்து பாருங்க. என்னை பார்த்து அவர் "உத்தம ஊழியனே" என்று சொல்லணும்!

அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு இதைதான் சொல்கிறார் - இது முக்கியமான ஒரு வேத பகுதி. இதை ஏற்கனவே நன்கு பார்த்திருக்கிறோம் ஆனாலும் நீங்க இன்னும் தெளிவாக புரிந்துகொள்ள

மறுபடியும் இதை வாசிக்கிறேன். அவர் 2 கொரிந்தியர் 5:10 ல் இவ்விதமாக சொல்லுகிறார், "நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டியிருக்கிறது," மேலும் அவர், "ஆகையால், நமக்கு ஒரு இலக்கு குறிக்கோள் உண்டு, இங்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவரை பிரியப்படுத்திட வேண்டும்," மேலும் அவர் சொல்கிறார், நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டி இருக்கிறது."

அதுமட்டுமல்ல, அவர் அப்படி சொன்னபிறகு, வசனம் 11ல் சொல்லுகிறார், "ஆகையால் கர்த்தருக்கு பயப்படத்தக்கது என்று அறிந்து மனிதனுக்கு புத்தி சொல்லுகிறோம்." நிறைய பேரும் இதை பார்க்கும்போது என்ன நினைக்கறாங்கன்னா, "சரி, அப்போஸ்தலனாகிய பவுல் அவிசுவாசிகளை பற்றி பேசுகிறார்," இல்ல இந்த பகுதியில் நம்மை பற்றிதான் பேசுகிறார். சரி, நிறைய நேரத்தை ஒதுக்கி எல்லாத்தையும் ஒன்று சேர்த்து இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்தை பற்றிய சமநிலையை உண்டாக்கும்போது அது பயப்பட வேண்டிய ஒன்றாக இருக்க கூடாது; ஆனா, அப்படி இல்லாமல், யோவான் சொல்றது போல அவருடைய வருகையில் நாம வெட்க்கப்படுகிறவர்களாக இல்லாதபடி ஜீவியம் பண்ணவேண்டும் அவசியமாகும்.

ஏன் இந்த மாதிரி சொல்றேன்? பதில் மிக எளிமையானது. கிறிஸ்துவின் நற்சாட்சியை பெறுவதே சிறந்த பலன் என்பதை மனதில்

கொண்டு பலனை பெறவேண்டும் எண்ணத்தோடு வாழ்வதில் எந்த தவறும் இல்லை, அவரை பிரியபடுத்த நினைக்கிறோம். சரி, இதை மனதில் வைத்துகொண்டு, பலன்கள் மூலமாக ஜனங்கள் ஊக்குவிக்கப்பட்ட சம்பவங்களை வேதத்தில் இருந்து பார்த்து அறிந்துகொள்ளலாம். இயேசு ஊக்குவிக்கப்பட்டார்? எதற்காக? "அவருக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவர் சிலுவையை சகித்தார்."

ஆபிரகாம் என்ன செய்தார், கையால் அஸ்திபாரம் போடப்படாத நகரத்திற்காக காத்திருந்தார் அதை கட்டுகிறவர் தேவனாக இருந்தார் என்கிறாரே? எபிரேயர் 11ம் அதிகாரத்தை பற்றி என்ன சொல்வோம்? மோசே ஊக்குவிக்கப்பட்டான் ஏன்னா அவன் வரப்போகும் பலன்மீது வாஞ்சையாக இருந்தான்." பவுல் சொல்கிறார், "நான் வீணாய் சிலம்பம்பண்ணாதபடிக்கு சத்தியத்தை பற்றிக்கொண்டு தொடர்ந்து ஓடுகிறேன்." இந்த காரணங்களின் நிமித்தம் நாம் ஊக்குவிக்கப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது. இருக்கட்டும், ஜோனதான் எட்வர்ட்ஸ் சொன்னது எனக்கு பிடிக்கும், தலை சிறந்த இறையியலாளர், எனலாம், அவருடைய விருப்பம் இதுதான் இந்த உண்மையாக வாழ்வதன் மூலம் எதிர்காலத்திற்கு போதுமான அளவு சந்தோஷத்தை சேர்த்து வைப்பதாக சொல்கிறார்." இது சுயநலம் என்று சொல்ல முடியாது. இயேசுவை பிரியப்படுத்த விரும்புகிறார் நீங்களும்

விரும்புவீங்கன்னு நினைக்கிறேன், அதுதான், நம்முடைய உண்மையான உத்வேகமாக இருக்கணும்.

**ஆன்கர்பெர்க்:** உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். நீங்க கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கும் போது உங்களுக்கு ஏதாவது ஒரு பலன் கொடுக்கப்படும் என்று நினைக்கிறீங்களா? சிலர் தங்களுக்கு ஒன்றும் கிடைக்காது என்கின்றனர். நீங்களும் அந்த மாதிரி யோசிக்கிறீங்களா, அப்படி நடக்குன்னு நினைக்கிறீங்களா, அப்படியென்றால் இதோ உங்களை ஊக்குவிக்கும் வார்த்தை. கவனமாக கேளுங்கள்:

**எர்வின் லட்சர்:** அதாவது, இயேசு சொன்னார் - தெளிவாக போதித்து இருக்கிறார் - சிலருக்கு பரலோக ராஜ்யத்தில் மற்றவர்களைவிட உயர்ந்த ஸ்தானம் இருக்குமாம். மிகப்பெரிய பொறுப்புகளும் இருக்கும். நம்மில் சிலருக்கு சில சிலாக்கியங்கள் வழங்கப்படும். ஆனா இப்போதைக்கு, ஜான், ஒரு விஷயத்தை நேயர்கள் புரிந்துகொள்ளும்படியாக விரும்புகிறேன் அதாவது அவங்க என்ன செய்றாங்கன்னு பெரிய விஷயம் அல்ல. எனக்கு அருமையானவர்களே, நீங்க ராஜாவின் பிள்ளை மகளாக இருக்கிறீர்கள். நீங்கள் அவருக்கு உரியவர்கள் அவர் அதைத்தான் முக்கியமானதாக கருதுகிறார். வேதம் சொல்கிறது உங்கள தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டு இருக்கிறது என்கிறது. குருவி விழுவதை கூட அவர் கவனிக்கிறார். அவருடைய நாமத்தினிமித்தம் கொடுக்கப்படும் ஒரு

கலச தண்ணீரை கூட பார்க்கிறார். இன்றைக்கு அல்லது நாளைக்கு நீங்க உங்க வேலையை துவங்கும்போது, உங்கள் மனசுல ஒன்று உறுதியாக இருக்கட்டும் தேவன் பார்த்துகொண்டு இருக்கிறார் நம்முடைய கிரியைகளை பதிவு செய்துகொண்டு இருக்கிறார் அவர் நமக்கு உதாரத்துவமாக பலன் அளித்திட போகிறார்.

**ஆன்கர்பெர்க்:** கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்போது, பல சமயங்களில் அருமையாக தோன்றப்படாத சில வேலைகளையும் செய்ய வேண்டிய சந்தப்பங்கள் நமக்கு பலமுறை ஏற்பட வாய்ப்புண்டு, உண்மையில், அதை ஏற்றுக்கொண்டு செய்ய முடியாத விஷயம் போலதான் தோன்றும். சிலவற்றை செய்யும்போது மகிழ்ச்சி இருக்காது. நீங்க ஒருவேளை தேவனுக்காக செயல்பட்டு கொண்டு இருக்கலாம் ஆனா நீங்க செய்கிற வேலையின் காரணாமாக உங்களுக்கு முழுமையான சந்தோஷத்தை பெற முடியாமல் போகும் நிலை இருந்தால் நீங்கள் அடுத்து மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய வார்த்தை இதுதான். இதை கவனமாக கேளுங்க.

**எர்வின் லட்சர்:** அதாவது, ஜான், நாம சந்தோசப்பட்டு செய்ய முடியாத காரியங்களையும் செய்யும்படி தேவன் நம்மை அழைத்திருக்கிறார். ஊழியங்களை நடத்திடும் நாமும் கூட சிலநேரங்களில் சில கடமைகளின் காரணாமா சில காரியங்களை செய்ய வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்படுகிறோம். அதாவது, இயேசு ஒரு உவமையை சொல்லி இருக்கிறார். தன்னுடைய

எஜமானுக்கு கீழ்படியாம இருந்த ஒரு ஊழியன் மனந்திரும்பி மறுபடியும் எஜமான் விரும்பிய படி செய்ய முவந்தான். முயற்சியே செய்யாம இருந்தவனை காட்டிலும் இந்த அடிமை உத்தமன் என்பதாக இயேசு கூறியிருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்றால், "நம்முடைய கடமையை நாம் செய்யும்போது லாபம் ஈட்டாத அடிமையை போல இருப்போம் என்கிறார்."

உண்மையில, ஜான், இதை இந்த மாதிரி யோசித்து பார்க்கிறேன்; நமக்கு இஷ்டமில்லாம ஒரு காரியத்தை நாம செய்ய முன்வந்து அதை எப்படியாவது செய்கிறோம் அது இயேசுவின் மகிமைக்காக செய்யப்பட்டதாக இருந்தாலும் அதற்கான பலன் மிகப்பெரியதாக தான் இருக்கிறது. ஏன்னா நமக்கு இஷ்டமான காரியங்களை செய்வது மிக சுலபம். தேவன் செய்ய சொல்கிற சில காரியங்கள் விருப்பமில்லாம இருந்தாலும், அவருடைய மகிமைக்காக சிறப்பாக செய்ய விரும்பிடுவோம், அது, உண்மையாகவே, அது அவருடைய கவனத்தை ஈர்த்து விசேஷ விதமான பலனை கொடுப்பதாக மாறுகிறது.

*****

**ஆன்கர்பெர்க்:** சரி கவனிங்க, நீங்க ஒரு கிறிஸ்தவராக இருந்தா, நிச்சயம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக சிறப்பாக நிற்க வேண்டும் என்ற விருப்பம் இருக்கும். சரியா? வரி, இந்த நிலையிலும் வேதம் உங்களை ஊக்குவித்து சொல்வதை கவனியுங்கள். தேவன் நீங்கள் மிகப்பெரிய பலனை பெரும்படி விரும்புகிறார். சிறந்த பலனை

பெறுவதற்கு இந்த பூமியில் வாழ்கிற நீங்கள் என்ன செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது? நம்முடைய வாழ்வை தேவன் மதிப்பிடும்போது என்ன பலனை தருவதாக வாக்களிக்கிறார்? அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். ஒலிம்பிக்கில் வீரர்கள் ஓடுவதை ஒப்பிட்டு அவர் இங்கு நாம் வாழ்கிற வாழ்க்கையை பற்றி அழகாக வர்ணித்து கூறியிருக்கிறார். Dr. லட்சர் பவுலின் போதனைகளை சுருக்கமாக விளக்குகிறார். கவனியுங்கள்:

**எர்வின் லட்சர்:** அதாவது, சாணம் ஒருவேளை இன்றைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் இன்றைக்கு உயிரோடு இருந்திருந்தா, அவர் நிச்சயமாக ஒலிம்பிக் பந்தயத்தை பற்றிதான் சொல்லியிருப்பார். தொடர்ந்து அவர் பந்தயங்களை பற்றியே பேசிக்கொண்டு இருந்திருக்கிறார் ஏன்னா இலக்கை நாம தவரிட கூடாது, பவுல் என்ன சொல்ல வர்றாருன்னா ஒழுக்கம்தான் நல்ல வீரனை உருவாக்குது அதே ஒழுக்கம்தான் நல்ல கிறிஸ்தவனையும் உருவாக்குகிறது. இங்கு 1 கொரிந்தியர் ஒன்பதாம் அதிகாரத்தில் சொல்கிறார், “பந்தய சாலையில் ஓடுகிறவர்கள் எல்லாரும் ஓடுவார்கள் ஆனால் ஒருவனே பந்தயத்தை பெறுவான் என்பதை நீங்கள் அறியீர்களா.| உண்மையாவே, நீங்களும் நானும் இருக்கிற இந்த பந்தயத்தில் நிச்சயம் நாம பந்தைய பொருளை பெற்றிடும் பந்தயமாக இருக்கு. இது ஒரு வித்தியாசமான பந்தையம்தான்.

ஆனாலும் அவர் சொல்கிறார், “பந்தயத்தில் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலும் இச்சையடக்கமாக இருப்பார்கள்.” இந்த போராடுகிற என்ற வார்த்தை இதற்கு கிரேக்க அர்த்தம் வியாகுலம்’ அதை பற்றி சில நிமிடங்களில் பார்க்கலாம். அந்த ஒழுக்கத்தில் வியாகுலப்படவேண்டும். அப்படிதா செய்றாங்கன்னு, அவர் சொல்றார், “அழிந்துபோகிரத்தை பெற அப்படி செய்கிறார்கள், நம்முடைய பலனோ அழிவில்லாததாகும். ஆகையால் நான் நிச்சயமில்லாதவானாக ஓடேன்; நா ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம் பண்ணேன், என் சரீரத்தை ஒடுக்கி கீழ்படுத்துகிறேன்.” ஜான், நிறையகிறிஸ்தவர்கள் இதை வேற மாதிரி வாசிப்பதை ஒப்புகொள்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன்: “என் சரீரத்தை ஒடுக்குகிறேன்”. சரி, பவுல் சொல்கிறார், “மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாக போகாதபடிக்கு என் சரீரத்தை நான் ஒடுக்கி காக்கிறேன் என்று சொல்கிறார்.”

சிறந்த விளையாட்டு வீரனாக செய்யும் சில தன்மைகளை பற்றி உங்களுக்கு எடுத்து சொல்கிறேன் இது அருமையாக இருக்கும் உங்களை, ஜெயிக்கும் கிறிஸ்தவர்களாக செய்யும். முதலாவதாக, இருப்பது, ஒழுக்கம். வியாகுலப்படுகிறேன். நீங்க இதற்கு முன்னால ஆகஸ்ட் மாதத்தில் கால்பந்து மைதானத்தை கவனித்து இருக்கிறீங்களா அங்க ஹெல்மட் போட்டுட்டு எல்லா உபகரணங்களோட சிலர் இருப்பாங்க. அவங்க வேர்த்து விறுவிறுத்து

இருப்பாங்க நீங்க அவங்ககிட்ட கேட்கலாம், “இப்படி செய்யும்படி யாரு அவங்கள அடிச்சுக்கிட்டா என்று! சரி, இதற்கான, பதில் நிச்சயமா, “யாரும் இல்ல,” அவங்க செய்யணுன்னு நினைக்கிறாங்க பார்டீக்களை தவிர்க்கிறார்கள் சந்தர்ப்பங்களை தியாகம் செய்கிறார்கள்; சிலநேரங்களில் தங்களுடைய படிப்பை கூட தவற விடுகிறார்கள்.எதுக்காக? அழிவுள்ள கிரீடத்தை அடைய போராடுகிறார்கள். என்னுடைய மகள் படுக்கும் பள்ளிக்கு சென்றிருந்தேன் அங்க திரைக்கு பின்னால் இருக்கும் பதக்கங்களை பார்க்க முடிந்தது. அவை அழிவுள்ள கிரீடங்கள். அவை என்றென்றைக்கும் உள்ளதாக நிலைத்திராது. ஒழுக்கம் தேவைபடுகிறது.

அடுத்ததாக திசை. பவுல் கூடுகிறார், “நான் ஆகாயத்தில் சிலம்பம்பண்ணேன்.” ஒரு இலக்கை நோக்கி போயிட்டு இருக்கீங்க. நா வளர்ந்தது ஒரு தோட்டத்துல, ஜான், ஒரு கதை இருக்குது அது உண்மையான கதைதான். அது உண்மை என்று எனக்கு தெரியும் ஏன்னா எனக்கு விவசாயியை பற்றி நல்லா தெரியும். அவர் நேராக புதருள்ள ஒரு இடத்தை பதப்படுத்தும்படி சென்றார் அவர் என்ன செய்தார் என்றால், கொஞ்சம் தூரம் தள்ளி தன்னோட ட்ராக்டரை வைத்து நேரடியாக அந்த புதரை நோக்கி தான் வண்டியை ஓட்ட வேண்டும் என்றும் அதற்கு குறிவைத்து அதற்கு நேராக ஒட்டும்படி முற்பட்டார். அது சிறந்த யோசனை, என்று நினைத்தார், ஆனா அவர்

திரும்பி பார்த்த போது, அந்த புதர் வளைந்து இருபதை அவர் கவனித்தார். அதற்கு காரணம் என்னன்னா - பக்கத்துல போற வரைக்கும் இதை அவரால பார்க்க முடியல - இப்ப தன்னுடைய கண்களை மாடுகளை மீது திருப்பி அவைகளை கடந்து செல்லும்படி நடத்தினார் - பிறகு; அவர் உறுதியாக இருந்து அந்த புதரை சுத்தம் செய்து முடித்தார்.

இதை நல்லா கவனமாக கவனியுங்கள். நமது மனதில் சரியான இலக்கு இல்லாவிட்டால் -‘ இயேசுவை பார்க்கவேண்டும், நமது விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிரவருமானவர், “ சரியான இலக்கு இல்லாவிட்டால் - நம்முடைய வாழ்க்கை சீர்குலைந்து போய்விடும். நேர்த்தியான வாழ்க்கை வாழ விரும்பினால், அதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்றால், என்ன நடந்தாலும், இயேசுவையே பார்த்திடுவேன் என்று சொல்லணும்.” சோதனைகள் வரும்போது, இக்கட்டான சூழ்நிலை வரும்போது, இயேசுவை பற்றி நான் அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த ஓட்டத்தை ஓட நான் அவர் மீது என் கவனத்தை பதிக்கிறேன். நாம ஒழுக்கத்தையும் திசையையும் குறித்து பேசியிருக்கிறோம்,, நம்முடைய கண்கள் கிறிஸ்துவின் மீது பதிந்து இருக்கவேண்டும்; நம்முடைய இலக்கு நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

எபிரெயரில் உள்ள சம்பவம் நினைவிருக்கிறதா அங்கு சொல்லப்பட்டு இருக்க்ரியது, “நமக்கு முன்பாக இருக்கும் ஓட்டத்தை

பொறுமையோடே ஓடக்கடவோம்.” மேலும் அங்கு சொல்லப்பட்டு இருக்கிறது, நாம் இடறிடாதபடிக்கு அப்படி செய்ய வேண்டும். நம்முடைய கால்களை இலகுவாக வைத்துகொள்ள வேண்டும். பாவம் நம்மை எளிதில் பிடித்துகொள்ளாதபடி உறுதியாக இருக்கவேண்டும். கற்பனை செய்து பாருங்க கோட் போட்டுட்டு ஒரு மனிதன் ஓடும்போது அவனுடைய கால்கள் எங்கையோ சிக்கி கொள்கிறதாம். அதைதான் பாவமும் செய்கிறது. நாம் இடறு விழும்போது, நம்மோடு மற்றவர்களை இழுத்து விடாதபடிக்கு நாம் பார்த்துக்கொள்ள வேண்டியது முக்கியம். ஆனா உண்மை என்னன்னா, நாம தடுமாறி கீழே விழும்போது, பெரும்பாலும் நம்ம கூட மத்தவங்களையும் சேர்த்து இழுத்து விட்டுடுறோம். அதனாலதான், ஜான், இதை நான் யோசிக்க விரும்புகிறேன் அதாவது நாம ஓடீட்டு இருக்கும்போது, விழுந்துபோகும் கிறிஸ்தவர்களை பார்க்க நேரிட்டால், நாம என்ன செய்யணுன்னு உங்களுக்கு தெரியுமா? அவங்களுக்கு கீழ போயிடனும். பவுல் எபிரேயர் புத்தகத்தில் சொல்கிறார், “தளர்ந்து முழங்கால்களை திடப்படுத்திடுங்கள். ஓட்டத்தை முடிக்கும்படி நாம் ஒருவருக்கு ஒருவர் உதவிடலாம். அதுமட்டுமல்ல, இன்னொரு விஷயத்தை சொல்ல முடியும் எல்லா சட்டதிட்டங்களையும் பின்பற்றி ஓடிட வேண்டும். அதாவது, உதாரணமாக, அருமையாக ஓட்டத்தை ஓடின பென் ஜான்சன் அவர்தான்னு, நினைக்கிறேன், சில வருடங்களுக்கு முன்பு தங்க பதக்கத்தை வென்றார் நினைவிருகிறதா. ஆனா அதுல்லாம் விருதாவா போயிடுச்சு ஏன்னா அவருடைய

சரீரத்தில் ஸ்டீராய்ட்ஸ் போட்டது கண்டறியப்பட்டது. அதனால எல்லா சட்டத்தையும் கைகொண்டு ஓட்டத்தை ஓடிடலாம். மேலும் பவுல் சொல்கிறார், “நான் பந்தயத்தில் ஆகாதவன் என்று தள்ளப்படாதபடிக்கு ஓடுகிறேன்.”

இந்த செய்தி தொடரில் போதுமான அளவிற்கு உங்களுக்கு நிறைய காரியங்களை சொல்லியிருக்கிறோம் இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கும்போது மிகப்பெரிய இழப்பை சந்திக்க வாய்ப்பிருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். அதோட, ஜான், அப்போஸ்தலனாகிய பவுல் தகுதியற்றவன் என்ற நிலையை அடையவும் வாய்ப்பிருக்கிறது என்கிறார். அதனால பரலோகத்திற்கு போக மாட்டோம் என்று அர்த்தமாகாது, ஆனா நமக்கான பலனை பெற்றுகொள்ளாமல் போக வாய்ப்பு இருக்கிறது. இப்ப, இந்த வார்த்தையின் அர்த்தத்தை மட்டும் யோசித்து பாருங்க. ஒழுக்கத்தோடு இருக்கலாம். எப்போது ஜனங்களுக்கு நான் சொல்வதுண்டு காலையில ஒன்பது மணிக்கு முன்னால தேவனோட நேரத்தை செலவிடுங்கள் - வேத வாசிப்பு, ஜெபம். உங்களுடைய நாளை தேவனிடம் ஒப்படையுங்கள் ஏன்னா ஒவ்வொரு நாளைக்கும் நீங்க கணக்கு கொடுப்பவராக இருக்கணும். நமக்கு அந்த உணர்வும் தீர்மானமும் உருதியாயிருக்கணும் நம்முடைய வாழ்வில் திசைகாட்டும் உரிமையை முழுவதுமாக அவரிடம் கொடுத்திட வேண்டும்.

இன்றைக்கு உங்களை ஒரு கேள்வி கேட்கட்டுமா. ஒரு நிமிடம் யோசித்து பாருங்க. கடந்த இருபது வருடங்களில், இன்றைக்கு இதை செய்திருக்கலாம் என்று எப்போதாவது யோசித்தது உண்டா? என்னுடைய இதயப்பூர்வமா சொல்கிறேன், இப்போதே செய்திடுங்க! இப்பவே செய்யுங்க.

**ஆன்கர்பெர்க்:** இறுதியாக ஒரு வார்த்தை. இதெல்லாம் நீங்க தேவனுக்கு முன்பாக நிற்கும் அந்த நாளில் நடுக்கத்தோடு நிற்பதற்காக சொல்லபடுகிற காரியங்களா, அப்படி இல்லை. நீங்கள் எதிர்பார்த்து காத்திருக்கும் நாளாக இருக்க செய்திடும் - தேவனுடைய நற்செய்தியை பற்றி உங்களுக்கு தெரியுமா, சுவிசேஷம். இதை கவனிங்க - அது உங்கள் இருதயத்தை சந்தோஷத்தினால் நிறைந்தோடும்படி செய்திடும்.

**எர்வின் லட்சர்:** ஜான், இதுவரை கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ளாத நபர்கள் இதை கேட்டு கொண்டு இருப்பார்களானால் அவர்களுக்கு ஒரு காரியத்தை நான் தெளிவு படுத்தும்படி விரும்புகிறேன். உங்க பாவங்களை அறிக்கை செய்வதில் இருந்து துவங்குவது கிடையாது. உங்களுக்கு அது நினைவில் இல்லாமல் இருக்கலாம் அப்படி செய்தாலும் சரி, ஆனா அது இரட்சிப்பிற்கான வழி அல்ல. உங்க பாவங்களோடு எப்படி இருக்கீங்களோ அப்படியே இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுகொள்ளுங்கள். விசுவாசத்தில் அவருக்கு பதில்கொடுங்கள் அவர்

மீது நம்பிக்கை வையுங்கள். அப்போது சட்டபூரவமாக மன்னிக்கப்படுவீர்கள்.

இப்ப, ஒரு கிறிஸ்தவராக, நாம நம்ம பாவங்களை அறிக்கை செய்கிறோம். இந்த மாதிரியாகத்தான் பிதாவாகிய தேவன் நம்மை ஒழுக்கத்திற்குள் நடத்துகிறவராக இருக்கிறார் என்பதை பார்க்க முடிகிறது. இப்ப, நாம, தேவன் நம்முடைய நினைவிற்கு கொண்டு வரும் எல்லா பாவங்களையும் அறிக்கை செய்யணும். ஆனா நற்செய்தி இதுதான். ஞாபகத்தில் இருக்கும் பாவங்களை நாம் அறிக்கையிடும்போது ஞாபகத்தில் இல்லாத பாவங்களும் சேர்ந்து மன்னிக்கப்படுகிறது.

அதாவது, 1 யோவானில் சொல்லப்பட்டு இருக்கு, “தேவன் ஒளியாயிருக்கிறது போல நாமும் ஒளியில் நடந்ததால், ஒருவருக்கு ஒருவர் ஐக்கியப்பட்டு இருப்போம்.” இதை தேவன் என்னோடு கொண்டிருக்கும் ஐக்கியம் என்றும் எனக்கு தேவனோடு உள்ள ஐக்கியம் என்றும் எடுத்துகொள்கிறேன். மேலும் அங்கு சொல்லப்பட்டு இருக்கிறது, “தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களில் இருந்தும் நம்மை சுத்திகரிகிறது.” நாம செய்ய வேண்டிய ஒரே வேலை என்னன்னா பரிசுத்த ஆவியிடம் நம்முடைய பாவங்களாய் அறிக்கை செய்ய வேண்டும் அவ்வளவுதான். அதை நாம பார்த்துகொண்டால் போதும், நமக்கு ஞாபகமில்லாததை பற்றி கவலை பட அவசியமில்லை. நினைவிருக்கட்டும், தேவன்

நம்மை ஒழுக்கத்திற்குள் நடத்துகிறார் அவரோடு சேர்ந்து நாம் நீதியுள்ள ஒப்பந்தம் பண்ணும்படி விரும்புகிறார். அந்த ஒப்பந்தத்தை மீறி நாம் நடக்கும்போது, மறுபடியும் அந்த ஒப்பந்தத்தை புதுபித்து அவற்றை அறிக்கை செய்யும்படி விரும்புகிறார்.

அதாவது, ஜான், காலிபோர்னியாவில் கேட்டிருக்கேன் ஒருத்தர் வேகமா போனதால பிடிபட்டதாக சொன்னாங்க. அவரை நீதிமன்றத்துக்கு அழைத்து வந்தார்கள் அவரிடம் அபராதம் கட்ட பணம் இல்லை. அங்க என்ன நடந்துச்சுன்னா நீதிபதி இருக்கைவிட்டு எழுந்து வந்து, தனது படிகட்டிளிருந்து இறங்கி வந்து, தன் அங்கியை கழற்றி, குற்றவாளியோடு நின்று, அவனுக்கான அபராத தொகையான நூறு டாலரை தனது சட்டைப்பையிலிருந்து எடுத்து மேஜையின் மீது வைத்துவிட்டு, பிறகு மீண்டும், அங்கியை போட்டுகொண்டு, தனது இருக்கைக்கு சென்று அமர்ந்து, அந்த அபராத தொகையை எடுத்துகொண்டு குற்றவாளியை பார்த்து சொன்னாராம்: “உனக்கு விடுதலை; உன்னுடைய அபராதம் செலுத்தப்பட்டு விட்டது.”

அருமையானவர்களே! இதுதான் சுவிசேஷம்! இதுதான் சுவிசேஷம்! நம்மால கொடுத்து தீர்க்க முடியாத கடனை தேவனிடத்தில் பட்டிருக்கிறோம். ஒரு பாடலின் வரிகள் சொல்வது போல, “என்னுடைய கண்ணீர் என்றென்றைக்கும் சிந்தப்படுமோ? என்னுடைய வைராக்கியம் பற்றிக்கொண்டே இருக்குமோ? எதுவும் பாவத்திற்கான நிவாரணம் அல்ல, நீரே பரிகாரி நீர் மட்டுமே பரிகாரி”.

என் கரத்தில் ஒன்றும் கொண்டு வரவில்லை, உமது சிலுவையை மட்டுமே நான் பற்றிகொள்கிறேன்.| நம்முடைய தேவையை அல்லாமல் வேறு ஒன்றையும் நாம் கொண்டு வருவது கிடையாது. பெற்றுக்கொண்டுதான் செல்கிறோம். தேவனுடைய பிரசன்னத்தில் என்றென்றைக்கும் நிற்கும்படியாக இயேசு கிறிஸ்துவின் நீதியை பெற்றுகொள்ளுகிறோம். இப்போதும் நாம், இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க கூடியவர்களிடத்தில் பேசவில்லை. அதை பற்றி பேசி விட்டோம். கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்பை பெற்று கொள்ளாமல் பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பை நோக்கி இருப்பவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது இதுதான்.

நீங்க ஒருவேளை, சரி, பாஸ்டர் லட்சர், நான் இப்ப என்ன செய்யணும்? என்று சொன்னால் உங்களுக்கு நான் சொல்கிறேன். நான் ஒரு ஜெபத்தை செய்ய போகிறேன் நீங்களும் இந்த ஜெபத்தை உங்கள் இருதய பூர்வமாக செய்யும்படி கேட்க்கிறேன். ஏன்னா ஜெபம் கூட உங்களை இரட்சிக்க முடியாது; உங்கள் நம்பிக்கையின் இடம்மாற்றம் இரட்சித்திடும். உங்களுடைய பாவமான நிலையையும் இரட்சிக்க கூடாத உங்கள் சுய தன்மையையும் விளங்க செய்வதுதான் ஜெபம் இயேசு சிலுவையில் மரித்த போது, பாவிகள் தேவனோடு ஒப்புரவாகும்படிக்கு மரித்தார், அதனால அவரை நீங்கள் பாவத்தை சுமந்தவராக ஏற்றுகொள்ளுங்கள். அப்படி செய்ய ஆயத்தமாக இருக்கீங்களா?

சேர்ந்து ஜெபித்திடலாம். |பிதாவே, இதை பார்த்துகொண்டிருக்கும் ஒவ்வொருவரோடும் இயேசுவின் நாமத்தில் நீர் பேசும்படியாக உம்மை கேட்டுகொள்ளுகிறோம், இதுவரை இயேசு கிறிஸ்துவை விசுவாசியாதவர்களோடு இடைபடும். அவர்களுக்கு உதவும், தகப்பனே, தங்கள் மீதிருக்கும் நம்பிக்கையை உம்மீது வைக்கட்டும், உமது வார்த்தை சொல்கிறது, "உம்முடைய நாமத்தை ஏற்றுகொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய புத்திரர்கள் என்பார்கள், அவருடைய விசுவாசித்தால் போதும் என்று எழுதியிருக்கிறதே." தகப்பனே பார்த்துகொண்டிருப்பவர்கள் விசுவாசிக்கும்படியாக அவர்களுக்கு உதவிடும். அதுமல்லா, பிதாவே, அவர்கள் உம்மை விசுவாசித்த பிறகு, அவர்களுக்கு விசுவாசத்தின் நிச்சயத்தை நீர் கொடுப்பீராக."

இப்போது உங்களிடம் நான் சொல்லுகிறேன். இந்த ஜெபத்தை சேர்ந்து ஜெபித்தீர்களா? "அன்பின் ஆண்டவரே, நான் ஒரு பாவி. என்னை என்னால் இரட்சிக்க முடியாது. இயேசு என் பாவங்களுக்காக மரித்ததற்காக நன்றி செலுத்துகிறேன்." இதை அவரிடம் சொல்லுங்கள். இந்த நேரத்தில், நீர் எனக்காக செய்ததை நான் பற்றிகொள்கிறேன் . நீங்களா அவரிடம் சொல்லுங்க. அதனால அவரை நம்புவது ஒருநாளும் குற்றமான தோன்றுவதில்லை; ஆனால் விசுவாசியாதவன் எவனோ அவன் ஏற்கனவே ஆக்கினைக்கு உட்பட்டவனாக இருக்கிறான்

ஏன்னா அவன் தேவனுடைய குமாரனை விசுவாசியாமல் இருக்கிறார்." இந்த வாக்குத்தத்தத்தை நீங்கள் கணக்கில் கொள்ள முடியும்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.